செ.வெ.எண்:73 நாள்:30.07.2018

**கரூர் மாவட்டம்**

**ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் கரூர் மாவட்ட அரசு அலுவலகங்களில் பிளாஸ்டிக் பயன்படுத்தத் தடை - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.06.2018 அன்று நடைபெற்ற சட்டபேரவை கூட்டத்தில் பிளாஸ்டிக் இல்லா தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் சட்டமன்ற பேரவை விதி எண்.110-ன்கீழ் 01.01.2019 முதல் ஒருமுறையே பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களின் பயன்பாடு தடை செய்யப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

இதனை தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.84, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்: 25.06.2018 அரசாணையின்படி 01.01.2019 முதல் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டிற்கு தமிழக அரசால் தடைவிதிக்கப்படடுள்ளது.

இதனை செயல்படுத்தும் வகையில் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசுசார்ந்த அலுவலுகங்களில் வரும் **01.08.2018** முதல் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களான (தடிமன் வேறுபாடின்றி) பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் மேசை விரிப்புகள், பிளாஸ்டிக் தேர்மாகூல் தட்டுகள் பிளாஸ்டிக் முலாம் பூசப்பட்ட காகித தட்டுகள், பிளாஸ்டிக் முலாம் பூசப்பட்ட காகித குவளைகள் பிளாஸ்டிக் டீ கப்புகள் பிளாஸ்டிக் குவளைகள், தெர்மாகூல் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல், பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் முலாம் பூசப்பட்ட கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள் உள்ளிட்ட எந்தப்பொருட்களையும் பயன்படுத்தக்கூடாது.

அந்தப்பொருட்களுக்கு மாற்றாக வாழை இலைகள், பாக்குமட்டை தட்டுகள், தாமரை இலைகள், காகித தாள்கள், எவர்சில்வர் மற்றும் கண்ணாடி குவளைகள், காகித உறிஞ்சு குழல், துணிப்பைகள், காகித மற்றும் சணல் பைகள், துணி - காகித கொடிகள் ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**ஆகஸ்ட் 1ஆம் தேதி** முதல் கரூர் மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்களில் பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை அமலுக்கு வருகின்றது.

எனவே, அரசு அலுவலர்கள் தங்கள் அலுவலகங்களில் உள்ள பிளாஸ்டிக் பொருட்களை முறையாக அப்புறப்படுத்த வேண்டும். அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்கள் பிளாஸ்டிக் பைகளில் மனுக்களை கொண்டு வந்தால் அந்த பிளாஸ்டிக் பைகளை வாங்கி அப்புறப்படுத்தி, அவர்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்டு, பிளாஸ்டிக் தடை குறித்து எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

நல்ல செயலுக்கான துவக்கத்தை நம்மில் இருந்தே துவங்குவோம். அனைவருக்கும் நாம் ஒரு எடுத்துக்காட்டாக திகழும் வகையில் பிளாஸ்டிக் பொருட்கள் தடைக்கு அனைத்து துறை அலுவலர்களும் பொது மக்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.**